29th March 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோதுமை மிகுதியாக இல்லை. அதுவும் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. அதைக்கூட நாம் இறக்குமதி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. இருந்தாலும், கோதுமையை இறக்குமதி செய்வதில் கஷ்டம் இல்லை. சில சிறைகளி லுள்ள திராவிடக் கழகக் கைதிகளே "ராகி, சோளம் முதலியவை களைச் சாப்பிடுவதைவிட கோதுமையையே சாப்பிடுகிறோம், கோதுமையே கொடுங்கள்" என்று எங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். சோளம், கம்பு முதலியவைகள் வேண்டாமென்றும் கோதுமையே வேண்டுமென்றும் கேட்கிற கைதிகளுக்கு கோதுமை கொடுக்கலாம் என்று இப்போது உத்திர விடப்பட்டிருக்கிறது.

Small-scale industries

* 457 SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted to the North Arcot district for small-scale industries for the year 1957–58;

(*b*) the amount spent so far taluk-wise; and

(*c*) the names of the industries and the villages where the amount has been spent so far?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 4,62,500.

(*b*) Vellore taluk, Rs. 1,63,005·90.
Ambur taluk, Rs. 78,857·80.

(*c*) (i) General Purposes Engineering Workshops, Vellore.

(ii) Service-*cum*-Training Centre for tanning and finishing leather at Vinnamangalam.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us whether all the amount that has been allotted has been spent?

THE HON. SRI R. VENKATARAMAN : The budget provision for 1957–58 for the General Purposes Engineering Workshop at Vellore was Rs. 2,50,700 and the amount spent up to 31st December 1957 is Rs. 1,63,000. I may tell the hon. Member that I just now opened the General Purposes Engineering Workshop at Vellore. In regard to Service-*cum*-Training Centre at Vinnamangalam, certain machinery has to be imported. At present the expenditure is Rs. 78,857.

SRI S. LAZAR : சிறு தொழில்களை ஆரம்பிப்பதைப் பொறுத் தவரையில், ஏற்கெனவே இருந்து சிதைந்துபோயிருக்கும் தொழில்களை மட்டுமே எடுத்துக்கொண்டு அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது சர்க்காரின் கொள்கையாக இருக்கிறதா ? அல்லது, புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்கெனவே இருக்கும் தொழில்களையே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை அல்ல. பல புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. உதாரணமாக, வேலூரில் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "ஜெனரல் பர்பஸஸ் எஞ்ஜினீரிங் ஒர்க்ஷாப்" புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சாலை தான். அங்கே சைக்கிலின் பாகங்களையும் எஞ்ஜினீரிங் காரியங் களில் உபயோகப்படும் பல பொருள்களையும் தயாரிக்கப்படும்.

[29th March 1958

Sri K. ANBAZHAGAN : வட ஆற்காடு ஜில்லாவில் திருவண்ணாமலை தாலுகாவில் சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டத்திற்காகக் கட்டிய கட்டிடங்களில் ஏதேனுமொரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டதல்லவா ? அதுபற்றி ஏதேனும் முடிவு செய்யப்பட்டதா ? திருவண்ணாமலை போன்ற தாலுகாக்களில் பிற்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதால் அங்கே தொழிற்சாலைகளை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த இரண்டு தொழிற்சாலைகளைத் தவிர வேறு சிறு தொழில்களை ஆரம்பித்து நடத்துவதற்கு தனியார் யாராவது முன்வந்தால், " ஸ்டேட் எய்ட்டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்ட் " பிரகாரம் அவர்களுக்கு பண உதவி அளிக்கப்படும். அந்த முறையில் திருவண்ணாமலையில் தோல் தொழிலுக்கு ஆயிரம் ரூபாய் வரையில் கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதுதவிர புதிய தொழில் ஆரம்பிப்பது பற்றி இப்போது யோசனை இல்லை.

Sri S. M. ANNAMALAI : சந்தவாசல் காடுகளில் மூங்கில் அதிகமாகக் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தக்கூடிய காகிதத் தொழிற்சாலையை அமைக்கலாம் என்பது மக்கள் விருப்பம். அதற்காக மக்கள் மனுக்களும் போட்டிருக்கிறார்கள். காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

Mr. SPEAKER : காகிதத் தொழிற்சாலை சிறு தொழிற்சாலையா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே அதைத் தான் நானும் சொல்ல விரும்பினேன்.

காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமானால், 5–10 கோடி ரூபாய் செலவாகும். அது பெரும் தொழில். இருந்தாலும் சிறு தொழில்களின் கீழ், கையினால் காகிதம் தயாரிக்கும் தொழிலை ஆரம்பிக்கலாம். அந்த முறையில் பேப்பர் தயாரிப்பதற்கு மூங்கில் பயன்படாது.

Sri K. RAMACHANDRAN : ஜெனரல் பர்பஸஸ் எஞ்ஜினீரிங் ஒர்க் ஷாப்பில் சைக்கிலின் பாகங்கள் தயாரிக்கப்படுவதாக கனம் மந்திரி சொன்னார். எந்த பாகங்களை அந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலை சென்னையில் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அப்படிப்பட்ட தொழிற்சாலை சென்னையிலும் இருக்கிறது. இப்போது வேலூரிலும் அப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளில், ' நட்ஸ், போல்ட்ஸ், பெடல்ஸ் ' முதலிய சைக்கில் பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. சைக்கில் செய்னையும் ப்ரீ-வீலையும் தவிர மற்றெல்லா சைக்கில் பாகங்களையும் நம் நாட்டிலேயே தயாரிக்க முடியும்.

Community radio sets

* 458 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of Community radio receiving sets;

(*b*) of this (i) the number of sets working; and

(ii) the number under repairs; and

(*c*) the average repairing charges and the average maintenance charges per annum?

The Hon. Sri P. KAKKAN : (*a*) 2,500 sets.

(*b*) (i) 2,443 sets (this excludes 17 sets which were not functioning for want of dry battery packs, etc.).

(ii) 40 sets.